எங்கேயும்...எப்போதும்...

தமிழன் ராஜ்ஜியம்

டிஜிட்டல் டெய்லி
Vol:02
Issue: 69
10.09.2026
வியாழக்கிழமை
* 30 பக்கங்கள்

சிங்கப்பூரில்

செயற்கை நுண்ணறிவு குறித்த இலவசப் பயிலரங்கு



சிங்கப்பூர் அக் 14: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் சிங்கப்பூர் கிளை சார்பில், தேசிய நூலக வாரியத்தின் ஆதரவுடன், விக்டோரியா சாலையில் உள்ள தேசிய நூலகத்தில் "அன்றாட வாழ்வில் செயற்கை நுண்ணறிவு" என்ற தலைப்பில் இலவசப் பயிலரங்கு நடைபெற்றது.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற செயற்கை நுண்ணறிவுப் பொறியாளர்கள் அ. முஹம்மது மாதிஹ், குகனவேல் அசோக் குமார் ஆகியோர் எளிய விளக்கங்கள் மற்றும் சிறந்த உதாரணங்களுடன் பயிலரங்கை நடத்தினர். இதில் சுமார் 100 பேர் பங்கேற்றனர்.